# இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை

# ஆண்டு அறிக்கை

# 2013

2013

## நிறுவனத்தின் பின்புலம்

| | | |
|---|---|---|
| நிறுவனம் | : | இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை |
| அமைச்சு | : | இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு |
| முகவரி | : | 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிடிய, கொழும்பு 05 |
| மின்னஞ்சல் முகவரி | : | chairmannhrdc@yahoo.com |
| இணையத்தள முகவரி | : | www.nhrdc.gov.lk |
| தொலைபேசி இலக்கம் | : | 0112595680 |
| பக்ஸ் | : | 0112595680 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

# தலைவரின் செய்தி

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை நிறுவப்பட்ட தினத்திலிருந்து வந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2013ம் ஆண்டு நிறுவனம் திருப்புமுனையை அடைந்த வருடமாக குறிப்பிட முடியும். 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் நிறுவப்பட்டதற்கான காரணம் தேசிய மட்ட கொள்கை உருவாக்கலுக்கு அரசுக்கு உதவுவதற்காக என்பதுடன் இதற்கு அவசியமான பதவியணியினர் 2013ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்தே இணைக்கப்பட்டனர். காலத்திற்கு காலம் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக அடிப்படையில் ஆலோசனையாளர்களாக இணைக்கப்பட்ட பதவியணியினர் இந்த நிறுவனத்தின் பணிகளை மேற்கொண்டுள்ளதுடன், 2013ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 8 நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்களாக இருந்ததுடன், இதில் நான்கு பேர் அலுவலக உதவிச் சேவையாளர்கள் ஆவர். இந்த நிலமையை புரிந்துகொண்ட நாங்கள் 2013ஆம் ஆண்டு நிறுவனத்தின் இலக்கு மற்றம் நோக்கத்தை பூர்த்தி செய்வதற்கு போதுமான பதவியணியினர் அடங்கிய ஊழிய எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு பிரமாணம் என்பவற்றுக்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அதற்கமைவாக 2013ம் ஆண்டு ஜுன் 30ம் திகதியன்று 30 பேர் அடங்கிய நிரந்த பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதன் கீழ் பணிப்பாளர் மற்றும் மூன்று உதவிப் பணிப்பாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன், ஆராய்ச்சி அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எட்டுப் பேரும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

அத்துடன், இந்நிறுவனம் நிறுவப்பட்ட சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை புரிந்துகொண்டு, அதன்படி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியுடன் கூடிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநோக்கினை அடைவதற்கு கண்டறியப்பட்ட தொழிற்பாட்டினை செயற்படுத்துவதற்கு 2013ம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. திறைசேரியினால் மூலதனச் செலவு என ஒதுக்கப்பட்ட ரூபா 16 மில்லியனுள் கீழ்வரும் செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது.
இந்த திட்டத்தில் கருத்திட்டங்களை தேர்ந்தெடுக்கும் பொழுது உரிய சட்டத்தில் குறிப்பிட்டப்பட்ட பணிகள் தொடர்பாக விசேட கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டத்தின் 14.1ம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பிரதான துறைகள் உள்ளடங்குமாறு கருத்திட்டங்கள் கண்டறியப்பட்டது.

## பிரதான துறைகள்

(a) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி

(b) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்

(c) வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தல்

(d) பாதிக்கப்பட்ட குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல்

(e) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பொற்றுக்கொடுத்தல் தொடர்பாக அல்லது மனித வளத் தொகுதியை நியாயப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

**<u>தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றம் கல்வி</u>**

இதன்போது தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி எனும் பரந்த துறைகள் உள்ளடங்குமாறு, விசேடமாக உயர் கல்வி வாய்ப்பு கிடைக்காத பாடசாலையை விட்டு நீங்கிய பிள்ளைகளை தொழில்கல்விக்கு அனுப்புவதற்காக பாடசாலையை விட்டு நீங்கிய பாடசாலைகளுக்காக அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறுபட்ட பயிற்சி நிறுவனங்களின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி விசேடமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்டங்குமாறு மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி, புத்தளம், குருநாகல் போன்ற மாவட்டங்களில் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்வதற்காக அரசினால் அனுமதிக்கப்பட்ட நடைமுறை மற்றும் கொள்கை பற்றிய கற்கையொன்றை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கை அரசிற்கு கையளிக்கப்பட்டது. பட்டதாரி பயிலுனர் யோசனைத்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட அரசுகளில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பல்வேறு எண்ணிக்கையில் பட்டதாரிகள் அரச சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர். இவ்வாறு இணைத்துக்கொள்ளும் பொழுது பின்பற்ற வேண்டிய கொள்கையின் வினைத்திறன் தொடர்பாக அறிந்துகொள்ளல் இதன் நோக்கமாக அமைவதுடன், இதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விதப்புரை மற்றும் முடிவு என்பன விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஊடாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**<u>பொது தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்</u>**

தொழில் வழிகாட்டல் பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவசியமாகும். எதிர்காலத்தில் தாம் தேர்ந்தெடுக்கக்கூடிய தொழிலுக்கு உரிய கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி பாடநெறியினைத் தேர்ந்தெடுப்பதற்கு இதனூடாக சந்தர்ப்பம் கிடைக்கும். எனினும் தற்போது தொழில் பயிற்சி நிறுவனங்கள் தாம் தமக்குரிய தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதுடன், கல்வி அமைச்சின் பாடசாலைகளினுள் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும். இதனால் உரிய தொழில் வழிகாட்டல் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்துகொண்ட நாங்கள் அனைவருக்கும் பொதுவான தொழில்வழிகாட்டல் ஒன்றைத் தயாரித்து கௌரவ அமைச்சரின் ஊடாக அரசுக்கு சமர்ப்பித்தோம்.

**<u>பாடசாலை இடைவிலகல் மாணவர்கள் தொடர்பான ஆய்வு</u>**

பல்வேறுபட்ட காரணங்களினால் பாடசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு நீங்குவதை நாங்கள் அறிந்துள்ளோம். அதற்கான தீர்வினை காண்பதற்கு இதற்கான காரணத்தை கண்டறிதல் அவசியம் என உணர்ந்த நாங்கள் பாடவாலை விட்டு நீங்கிய மாணவர்களை தொழில் கல்விக்கு ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்ற மாணவர்களை இணைத்துக்கொண்டு அது தொடர்பான கற்கையை மேற்கொண்டு உரிய நிலைமையை கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## யுத்தத்தினால் பாதிப்படைந்த குடும்பங்கள் தொடர்பான ஆய்வு

எங்கள் நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டத்தின் 14 (1)ம் பந்திக்கு அமைவாக அடையாளம் காணப்பட்ட 5 துறைகளில் ஒன்று பாதிப்படைந்த சமூக் குழு தொடர்பாக கற்கையொன்றை மேற்கொண்டு அரசுக்கு யோசனையை சமர்ப்பித்தல் ஆகும். இதன் கீழ் விசேடமாக எங்கள் கௌரவ அமைச்சர் டளஸ் அழகப்பெரும அவர்களின் ஆலோசனைப்படி நாங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் போது தாய்/ தந்தை /இருவரையும் இழந்த குடும்பங்கள் தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொண்டோம். இந்த இலக்குக்கு உரிய குடும்பங்கள் 7500 வரையில் இருக்கும் என்பதை இரண்டாம் நிலைத் தரவுகள் மூலம் உறுதிப்படுத்திக்கொண்ட நாங்கள் ஆய்வுக்கான கேள்விக்கொத்தை தயாரித்து அது தொடர்பான பயிற்சியினை அந்த மாவட்டத்தின் அரச அலுவலர்களுக்கு வழங்கினோம். அவர்களின் ஊடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அடையாளம் காணப்பட்ட 7500 குடும்பங்களில் 6704 குடும்பங்கள் எங்கள் கேள்விகளுக்கு பதிலளித்திருந்ததன் மூலம் அது வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டது. அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிலளித்தி குடும்பங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **வினாக்கொத்தின் வகை** | **பூநகரி** | **பச்சிலைப்பள்ளி** | **கண்டாவளை** | **கரச்சி** | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| சிறியது | 771 | 504 | 1352 | 3406 | 6033 |
| பெரியது | 182 | 182 | 83 | 222 | 671 |
| மொத்த எண்ணிக்கை | 953 | 688 | 1435 | 3628 | 6704 |

இந்த ஆய்வின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் SPSS நிகழ்ச்சித்திட்டம் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவதானிப்பு மீண்டும் சமூகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் கருத்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் உட்பட அரச அலுவலர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் கருத்தும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியில் அமைச்சு செயலாளர் உள்ளடங்களாக உயர் மட்ட அரச அலுவலர்களின் அவதானிப்பு பெறப்பட்டு இறுதி அறிக்கை கௌரவ அமைச்சரின் ஊடாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### தயட கிருள கண்காட்சி

2014ம் ஆண்டு தயடகிருள கண்காட்சியை குருநாகல் மாவட்டத்தில் நாடாத்துவதற்கு அரசு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்ததுடன், அதற்காக குருநாகல், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அரசு தீர்மானம் எடுத்தது. அதன் கீழ் கீழ் வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

**(அ) எண்ணத்தை மேம்படுத்தல்**

அரச சேவையினுள் காணப்படும் மந்த சுபாவத்தை அகற்றி சேவையாளர்களை மிக உற்சகமான ஊழியர்களாக மாற்றுவதற்கு அரச ஊழியர்களுக்கான 03 எண்ணத்தை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 3 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டது. இதன் கீழ் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் பூரண அதிகாரத்தின் கீழ் புத்தள மாவட்ட செயலாளரினால் சிலாப நகரை கேந்திரப்படுத்தி அரச சேவைக்கு உள்வாங்கப்பட்ட 200 பட்டதாரிகளுக்கு ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. அதே போல் குருநாகல் மாவட்டத்தன் வாரியபொல நகரை கேந்திரப்படுத்தி வாரியப்பொல பிரதேச செயலாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒருநாள் நிகழ்ச்சித்திட்டத்தில் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த 200 ஊழியர்கள் பங்குபற்றினர். சப்பிரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் கேகாலை மாவட்ட கல்வித்துறையைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களை உள்ளடக்கிய கல்வி நிர்வாக சேவை ஊழியர்களுக்கான ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர் பங்குபற்றியவர்களிடமிருந்து விளைவு பெறப்பட்டதுடன், ஒருநாள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அனேக ஊழியர்களின் எண்ண இயலளவு மேம்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிந்தது.

**(ஆ) பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.**

இந்த 3 மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் சிலவற்றில் கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

1. தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக கிராமத்துப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு உடல் மற்றும் உள நலத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

   i. மாபோபிட்டிய மகா வித்தியாலயம், கேகாலை மாவட்டம்
   ii. காமேல் பெண்கள் வித்தியாலயம், புத்தளம் மாவட்டம்
   iii. வட்டரக்க மகா வித்தியாலயம், குருநாகல் மாவட்டம்.

2. தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக நகரத்துப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சைபர் வெளியின் பயங்கர முகம் பற்றி விளக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

   i. சுவர்ண ஜயந்தி மகா வித்தியாலயம், கேகாலை மாவட்டம்
   ii. காமேல் பெண்கள் பாடசாலை, புத்தளம் மாவட்டம்
   iii. வட்டரக்க மகா வித்தியாலயம், குருநாகல் மாவட்டம்

**மின்னிலத்திரனியல் ஆவண முறை மற்றும் தரவு முறைமையைக் கண்டறிதல்**

எங்கள் நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டத்தின் 16(2)(ஈ) பந்தியில் குறிப்பிட்டாவாறு மனித வள அபிவிருத்திக்கு உரிய தரவு முறையொன்றை பேணுதல் வேண்டும். அதன்படி, விசேடமாக பாடசாலையை விட்டு நீங்கிய பாடசாலை அனைத்து பிள்ளைகளையும் பதிவுசெய்யக்கூடிய முறைமையொன்று www.nhrdc.gov.lk/ எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இம்முறைமையின் கீழ் பதிவுசெய்யப்படும் பிள்ளைகளுக்கு அதனுடாக தொழில் பயிற்சி அல்லது வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதோடு தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மேலதிகமாக பிரச்சார செலவு இல்லாது தொழில்பயிற்சியினை பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல் பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான விண்ணப்பங்களை இதனுாடாக தேர்ந்தெடுப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும் பிரதேச செயலகங்களை தொடர்புபடுத்திக் கொண்டு பாடசாலையை விட்டு நீங்கிய அனைத்து இளைஞர்களையும் பதிவுசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தகவல்தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில் பாரம்பரிய கோவை மற்றும் கடிதமெழுதல் முறைக்கு பதிலாக மின்னிலத்திரனியல் ஆவண முகாமைத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ் கடிதத்தின் வரைவினை அச்சுப்பிரதியெடுக்காமல் மென்பிரதியாக உரிய அலுவலருக்கு சமர்ப்பிப்பதற்கும், கோவை குறிப்பு மற்றும் கடிதங்களை இதனுாடாக செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு உரிய அனைத்து உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2014ம் ஆண்டிளுள் முழுமையாக கடதாசி பாவனையற்ற அலுவலக முறைமையை செயற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

விஜய விக்கிரமரத்தன
தலைவர்

**உள்ளடக்கம்** **பக்க எண்**


1. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு 1-3

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு 4-5

3. சபை மற்றும் கூட்டங்கள் 6

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம 7-8

5. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி 9-10

6. கருத்திட்டம

6.1 கிளிநொச்சிக் கருத்திட்டம் 11-12

6.2 பட்டதாரிகளை அரச அலகுக்குள் ஆட்சேர்ப்பு செய்தல், அவர்களின் தொழில் திருப்தி மற்றும் அரச உற்பத்தித்திறனுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆய்வு 13-16

6.3 தொழில் இலக்குத்திறன் அபிவிருத்தியின் ஊடாக பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்களை உயர்த்தும் சமூக நிவாரண நிகழ்ச்சித்திட்டம்

6.4 தயட கிருள 23-24

6.5 தொழில் வழிகாட்டல் முறைமையைத் தயாரித்தல் 25

6.6 www.nhrdc.gov.lkவெப் தளத்தை பிரபல்யப்படுத்தல் 25

6.7 செய்தித்தாளை வெளியிடுதல். 25

7. இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை 26-27

8. நிதிச் செயற்பாட்டுக் கூற்று 28

9. 2013 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று 29

10. காசுப் பாச்சல் கூற்று 30

11. நிதிப்பாய்ச்சல் கூற்றின் குறிப்புகள் 31-37

12. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் 40-43

13. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 44-56

## 6. நிறுவனத்தின் பின்புலம் மற்றும் விடயப்பரப்பு

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையானது இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள முக்கிய பணிகளை செயற்படுத்துவதற்காக 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மனிதவள அபிவிருத்தி தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்குவதற்கும் மற்றும் மனித வள அபிவிருத்திக்கான கொள்கைகளை வகுப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் துணைபுரிதல் போன்ற முக்கிய பணிகளை பொறுப்புகளை வகிக்கின்றது. இதன் பிரதான நோக்கமாக அமைவது உரிய அமைச்சருக்கும், அரசின் மனித வள அபிவிருத்திகும் விதப்புரையினை வழங்கும் உயர் மட்ட நிறுவனமாக தொழிற்படுதல் ஆகும்.

### 1.1 நிறுவனம் பற்றிய முகவுரை

தேசிய மட்ட ஆலோசனைச் சபையாக 1987 ஜூன் 05ம் திகதி இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் சுயாதீன சட்டபூர்வ சபையாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து, குறுகிய காலத்தினுள் அதாவது 2000ம் ஆண்டு இந்த நிறுவனம் கைத்தொழில் கல்வி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் சாட்டப்பட்டதுடன், 2001 இல் இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை கல்வி மற்றும் கலாச்சரா அமைச்சின் கீழ் சாட்டப்பட்டது. மீண்டும் அரசு மாற்றம் அடைந்தவுடன் இந்த நிறுவனம் திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவ்வாறு குறுதிய காலத்தினுள் பல்வேறுபட்ட அமைச்சின் கீழ் இருந்து வந்த நிறுவனம் தற்போது இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

### 1.2 தொலைநோக்கு :-

**“தொலைநோக்குடைய இளைஞர்கள் மற்றும் திறனுடைய மனித வளம் மிக்க தேசியம்**

### 1.3 செயற்பணி :-

மனித வளத்திற்கு செயற்திறனுடைய கொள்கை மற்றும் உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் வசதியளித்தல் மூலம் **இலங்கையை ஆசியாவின் அதிசயமாக** மாற்றுவதற்கு பங்களிப்பு செய்தல்

## 1.4 நோக்கம்:-

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் நோக்கமாக அமைவது அரச மனித வள அபிவிருத்தி தொடர்பாக ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கு பொருத்தமான நிறுவனச் சட்டகத்தை உருவாக்கல் ஆகும். மனித வள அபிவிருத்திக் கொள்கைச் செயற்பாட்டும் திட்டங்கள், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வளப் பிரிவினை மேம்படுத்துதல் போன்ற மனித வள அபிவிருத்திக்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை பொறுப்பு வகிக்கும். சபைச் சட்டத்திற்கு அமைவாக சபையின் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. (அ) தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி

   (ஆ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்

   (இ) வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்

   (ஈ) பாதிப்படைந்த குடும்பக் குழுக்களுக்கு சமூகப் பாதுகாப்பினைத் திட்டமிடுதல்

   (உ) பொருளாதார மீள்கட்டமைப்பு மூலம் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக அல்லது உரிய மனித வள தொகுதியை நியாயப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் உட்பட, தேசிய மனித வள கொள்கையின் அனைத்து பிரிவு தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

2. தேசிய கொள்கைக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அரசுக்கு சமர்ப்பிப்பதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு விதப்புரையை வழங்குதல்.
3. தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் செயற்படுத்தப்படும் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பரீசீலித்துப்பார்த்தல் மற்றும் தேவையாயின், அக்கொள்கைகளுக்கு திட்டங்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செய்யவேண்டிய மாற்றங்களை அமைச்சருக்கு விதப்புரை செய்தல்.
4. அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவமை ஆராய்ந்து பார்த்தல்.
5. இந்த சட்டத்தின் உபஅட்டவணையில் குறிப்பிடப்பட்ட யாதேனும் வியம் தொடர்பாக யாதேனும் கருத்திட்டங்களை செயற்படுத்தல். அவ்வாறு இருந்த போதிலும் கருத்திட்டம் வேறுயாதேனும் அமைச்சருக்கு சாட்டப்பட்ட யாதேனும் விடயம் தொடர்பாக இருக்குமாயின், அதனை செயற்படுத்தல் என்பது அந்த அமைச்சரின் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும்
6. தேசிய நோக்கத்திற்கு அமைவாக மனித வளத்தினை அபிவிருத்தி செய்வதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 1.5 சபைக்கு உள்ள அதிகாரங்கள்

1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 (2)(1)ம் உபபந்தியின் கீழ் சபைக்குரிய அதிகாரங்கள் இவையாகும்.

(அ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆய்வுகள், விசாரணைகள், கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) மனித வள அபிவிருத்திக்குரிய விடயங்கள் தொடர்பாக நிபுணர்களின், தொழில்சார்ந்தவர்களின் அல்லது மக்களின் கருத்தினை அறிந்து கொள்வதற்கு வெளிப்படையாக அல்லது தனிப்பட்ட ரீதியில் விடங்களை கேட்டறிதல்.

(இ) சபையினால் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு சமமான பணிகளை இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளைப் பேணுதல்.

(ஈ) இந்த சட்டத்தின் கீழ் சபையின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்து ஒப்பந்தகங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் அவற்றினை நிறைவேற்றுதல்.

(உ) இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட நபர்களின் ஊடாக மனிதவள அபிவிருத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(ஊ) மனித வள அபிவிருத்தி மற்றும் அதற்குரிய விடயங்கள் தொடர்பான தகவல் தரவு வங்கியொன்றினை நிறுவி அதனைப் பேணுதல்.

(எ) ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல்.

(ஏ) அசையும் மற்றும் அசையா இருவகை நன்கொடை மற்றும் நிவாரணங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஐ) மனித வள அபிவிருத்தியில் பல்வேறுபட்ட பிரிவுகளில் திறன் நிபுணத்துவ ஒதுக்கொன்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினைக் கொண்டு சபை அலுவலர்களின் திறமையை மேம்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) சபையின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான குழு நிபுணத்துவக் குழு மற்றும் ஆலோசனைச் சபை என்பவற்றை நிறுவுதல்.

(ஓ) அமைச்சுகளில், அரச திணைக்களங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், சட்டபூர்வ சபைகளில், மாகாண சபைகளில், உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகள் உட்பட சபையினால் அவசியம் எனக் கருதப்படும் தகவல்களை கோருதல் மற்றும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதல்.

(ஔ) சபையின் பணி அதிகாரங்கள் மற்றும் பணியினை நிறைவேற்றுதல் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் செயற்படுத்துவதற்கு அவசியம் என எண்ணும் நன்மையானது அல்லது பின்னர் பலன்தரக்கூடியது எனும் அனைத்தையும் செயற்படுத்தல்.

## 02. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் இந்த சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவப்பட்ட தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்பவர்கள் உள்ளடங்களாக 20 நபர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் 15 பேர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடனும் உரிய நிறுவனங்களில் இருந்து 5 பேராகவும் நியமிக்கப்படுவர். இதைவிட உரிய துறையில் முன்னனுபவம் மற்றும் திறமை என்வற்றை கருத்தில் கொண்டு 5பேர் நியமிக்கப்படுவதுடன், இதில் இருவர் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவராவர். சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிறைவேற்றுத் தலைவராக பெயரிடுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதான நிறைவேற்று அலுவலர் சபையின் தலைவராவார். சபை 31.12.2013ம் திகதி 19 அங்கத்தவர்களை கொண்டமைந்திருந்தது.

2013ம் ஆண்டு சபையின் பணிப்பாளர் சபை கீழ்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

**சட்டத்தின் 3(1)(அ) வில் இருந்து (வ) வரையிலான பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. திரு விஜய விக்ரமரத்ன - தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை
2. திரு கே. ஏ திலகரத்ன - செயலாளர், இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு
3. கலாநிதி திரு சுனில் ஜயந்த நவரத்ன - செயலாளர், உயர் கல்வி அமைச்சு
4. திரு அனுர திசாநாயக்க - செயலாளர், கல்வி அமைச்சு
5. டாக்டர். திரு. வை.டி. நிகால் ஜயதிலக - செயலாளர், சுகாதார அமைச்சு
6. திருமதி தாரா விஜேதிலக - செயலாளர், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
7. திரு.டபில்யூ.ஜே.எல்.யூ.ஜயவீர - செயலாளர், தொழிலாளர் தொடர்புகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சு
8. திரு பீ.பி.அபேகோன் - செயலாளர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
9. திரு அனுர சிறிவர்தன அவர்கள் - செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
10. திரு.ஆர்.எம்.டி.பி. மீகஸ்முல்ல - செயலாளர், விவசாய அமைச்சு
11. கலாநிதி திரு தயந்த எஸ். விஜேசேகர - தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
12. கலாநிதி திரு ரசிக பெரேரா -பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு
13. பேராசிரியர் திரு லக்ஷ்மன் ஜயதிலக- தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு

14. பேராசிரியர் திருமதி கிருஷானிகா ஹிருமுரேகம - தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

15. திரு சந்தன அருணதேவ - தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கல் அதிகாரசபை

16. திரு ஏ தயாரத்ன - மேலதிக பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம்

**சட்டத்தின் 3(2)(ஜ) பந்தியின் கீழ் நியமனங்கள்**

1. திரு பியதாச பத்திரண வீரசிங்க - சரசி, ரதம்பொல, ஊருகமுவ
2. திருமதி லலிதா விதானாராச்சி - இல 377, தங்கல்ல வீதி, மத்தவத்த, மாத்தறை
3. திரு ஆர் விக்ரமசிங்க - 36 C , விகார மாவத்தை, பப்பிலியான

3. சபை மற்றும் கூட்டங்கள்

**2013ம் ஆண்டு இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டங்கள் மற்றும் நடத்தப்பட்ட தினங்கள் மற்றும் பங்குபற்றிய அங்கத்தவர்களின் விபரங்கள்**

| | நிர்வாக சபையின் அங்கத்தவர்களின் பெயர் | 2013.01.18 | 2013.03.27 | 2013.05.23 | 2013.08.02 | 2013.10.31 | 2013.12.27 |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | தலைவர், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை | √ | √ | √ | √ | √ | √ |
| 02. | செயலாளர்,இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | √ | - | - | - | - | - |
| 03. | செயலாளர், உயர் கல்வி அமைச்சு | - | - | - | √ | - | - |
| 04. | செயலாளர், கல்வி அமைச்சு | - | - | - | - | - | - |
| 05. | செயலாளர், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | √ | - | - | - | - | - |
| 06. | செயலாளர், தொழிலாளர் தொடர்புகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சு | - | - | - | - | √ | - |
| 07. | செயலாளர், அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | - | - | - | - | - | - |
| 08. | செயலாளர், சுகாதார அமைச்சு | - | - | - | - | - | - |
| 09. | திரு அனுர சிறிவர்தன அவர்கள் - செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு | - | - | - | - | - | √ |
| 10. | செயலாளர், விவசாய அமைச்சு | √ | √ | - | - | √ | √ |
| 11. | தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு | √ | √ | - | √ | √ | √ |
| 12. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு | √ | - | √ | √ | - | √ |
| 13. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | - | √ | √ | √ | √ |
| 14. | தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | - | √ | - | √ | √ | √ |
| 15. | தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கல் அதிகாரசபை | - | - | - | - | - | - |
| 16. | செயலாளர்,<br>நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு ( பிரதிநிதி) | √ | √ | √ | √ | √ | √ |
| 17. | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திருமதி லலிதா விதானாராச்சி | - | - | √ | - | √ | √ |
| 18. | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திரு பியதாச பத்திரண வீரசிங்க | √ | √ | - | √ | √ | √ |
| 19· | நியமிக்கப்பட்ட அங்கத்தவர் - திரு ஆர் விக்ரமசிங்க | - | √ | √ | √ | √ | √ |
| | | 09 | 07 | 06 | 09 | 10 | 11 |

**4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை – ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வரைபடம்**



| பதவிப் பெயர் | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | 31.12.2013 திகதியன்று சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை | 31.12.2013 திகதியன்று வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தலைவர் | 01 | 01 | - | திரு விஜய விக்ரமரத்ன |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு துலித விக்ரம |
| உதவிப் பணிப்பாளர் | 03 | 03 | - | திரு எச் தியாகசீலன்<br>திரு யு.எஸ்.டி. விதானகே<br>திருமதி ஜே.ஏ.சி.ஜி.ஜயசிங்க |
| சபைத் தலைவர் ∴சட்ட அலுவலர் | 01 | 01 | - | செல்வி ஜி.ஜி.கயுனி உப்பலா |
| ஆய்வு உத்தியோகத்தர் | 04 | 04 | - | திருமதி ஆர்.எம்.ஏ.யு.கே. இரத்னாயக்க<br>செல்வி ஏ.எச்.டி.சி. பெரேரா<br>செல்வி எச்.டி.ஏ.ஏ.ஹதுரசிங்க<br>திரு டி.எம்.எஸ்.என.பி.ஜயதிலக |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | - | திருமதி சாமினி காரியவாசம் |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 03 | 01 | திருமதி பீ.ஈ.எஸ். சேனாரத்ன த சில்வா<br>திரு ஆர்.டி.சி.எஸ் ராஜபக்ச<br>திரு கே.ஜி.ஜி பெரேரா |
| தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் | 01 | 01 | - | செல்வி நாளிகா இரத்னாயக |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 07 | 01 | திருமதி.கே.எஸ்.என் பெரேரா<br>திருமதி சீ.கே.ஜயசேகர<br>திரு.சி.ஆர்.மத்தகே<br>திருமதி.கே.ஏ.எம்.தமயந்தி<br>செல்வி.எம்.ஜி.என்.தில்ஹாரி<br>திரு.டபில்யூ.எம்.லக்சித ரஜித்<br>செல்வி ஜி.எச்.ஜி.சி.பிரியதர்சனி |
| சாரதி | 04 | 03 | 01 | திரு.ஜி.எம். பின்னதுாவ<br>திரு.டபில்யூ.எச்.ஈ. ஜயரத்ன<br>திரு என்.ஜி.இசான் ரெக்ஸ்மன்ட் |
| அலுவலக உதவியாளர் | 04 | 04 | - | திரு புத்திக்க விஜேசிங்க<br>திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்த எண்ணிக்கை** | 33 | **29** | **04** | |

**5. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் பதவி**

2012ம் ஆண்டு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக முகாமைத்துவச் சுற்றுநிருபம் இலக்கம் 30ன் ஏற்பாடுகளுக்கு அமைவாக திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு பிரமாணத்திற்கு 05.03.2013ம் திகதி அனுமதியளிக்கப்பட்டது. அதன்படி அனுமதியளிக்கப்பட்ட பதவியணிகளில் வெற்றிடமாக இருந்த நிறைவேற்று தரப் பதவிகள் உட்பட அனைத்துப் பதவிகளுக்கும் தகுதியுடைய அலுவலர்களை இணைத்துக்கொள்ளல் 06.06.2013ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி சபைச் சட்டத்தில் சாட்டப்பட்ட பணிகளுக்கான செயற்பாட்டு திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு 2013ம் அரையாண்டில் இயலுமானது.

சேவையில் இருந்து விலகுதல்

| பெயர் | பதவி | விலகிய தினம் |
|---|---|---|
| திரு எம்.கே.ஜி.லக்மால் | சாரதி | 2013.10.31 |
| திரு.யு.ஜி.டி.சி.ஆரியரத்ன | அபிவிருத்தி அலுவலர் | 2013.11.14 |
| திருது துலித விக்ரம | பணிப்பாளர் | 2013.12.31 |

அரச சேவைக்கு புதிதாக இணைந்துகொள்ளப்பட்ட இந்த அனைவரினதும் இயலளவு மேம்படுத்தல் தேவை கண்டறியப்பட்டு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான பல்வேறுபட்ட விடயங்களின் ஊடாக பயிற்சி செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டதுடன், இச்செயலமர்வுக்கு இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் அமைச்சின் கீழ் உள்ள ஏனைய 16 நிறுவனங்களைச் சேர்ந்த பதவியினரும் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதன் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதற்கு பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 1ம் அட்டவணையிலும் தேசிய மனிதவள அபிவிருத்தி சபை ஊழியர்களுக்கு மட்டும் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழச்சி 2ம் அட்டவணையிலும் காட்டப்பட்டுள்ளது.

விசேடமாக ஆய்வுக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், அபிவிருத்திக் கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கும், அதேபோல் தாபனக் கோவை மற்றும் நிதிப்பிரமாணத்திற்குரிய பயிற்சி என்பவற்றின் மூலம் அலுவலக பதவியணியினர் மிகக்குறுகிய காலத்தில் மிகப்பரந்த அறிவினைப் பெற்றுக்கொண்டவராக உருவாகினர்.

1ம் அட்டவணை

| நிறுவனத்தின் பெயர் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | கருத்திட்ட அறிக்கையைத் தயாரித்தல் | | | கணக்காய்வு இல்லாத அரச சேவை | மதிப்புக்குரிய அரச சேவை | மனிதவள அபிவிருத்தி தொடர்பான ஆய்வு முறைகளைக் கண்டறிதல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013.01.21 | 2013.01.28 | 2013.01.29 | 2013.02.19 | 2013.02.28 | 2013.4.30 | 2013.6.14 | 2013.6.17 |
| இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை | 12 | 8 | 8 | 8 | 12 | 6 | 10 | 13 |
| இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | 29 | 2 | - | - | 1 | 18 | 5 | 2 |
| கிராமத் தலைவர்களை பயிற்றுவிக்கும் மத்தியநிலையம் | 5 | 6 | 6 | 4 | - | 1 | 12 | 12 |
| மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு | 12 | 12 | 10 | 8 | - | 4 | 6 | 4 |
| இளைஞர் படையணி | - | 5 | 5 | 4 | - | - | - | - |
| வரை. தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்கம் | 5 | 2 | 2 | 2 | - | | 2 | 2 |
| வரை. இளைஞர் சேவை நிறுவனம் | 3 | - | - | - | - | - | - | - |
| சமுத்திரப் பல்கலைக்கழகம் | 9 | 4 | 4 | 4 | - | 1 | 3 | 3 |
| தொழில் பயிற்சி அதிகாரசபை | 20 | 7 | 7 | 5 | 15 | 22 | 3 | 3 |
| தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்கம் | 16 | 4 | 4 | 4 | 6 | - | - | - |
| தேசிய இளைஞர் சேவை மன்றம் | - | 6 | 6 | 6 | 5 | 16 | 4 | 3 |
| தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கல் அதீகாரசபை | - | 4 | 4 | 4 | 10 | 10 | 2 | 2 |
| ஜேர்மன் தொழில்நுட்ப பயிலுனர் கல்லூரி | 3 | 3 | 5 | - | 5 | 7 | - | - |
| | **114** | **63** | **61** | **49** | **54** | **85** | **47** | **44** |

2ம் அட்டவணை

| நிதிப் பிரமாணம் மற்றும் தாபனக் கோவை | அலுவலக முகாமைத்துவம் | வழங்கல் (1) | மதிப்புக்குரிய அரச சேவை | விடுமுறை பற்றிய செயலமர்வு | தொழிற்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல் பற்றிய செயலமர்வு | | வழங்கல் (2) | தொடர்பாடல் | கருத்திட்ட அறிக்கையை தயாரித்தல் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2013.6.24 | 2013.7.17 | 2013.8.2 | 2013.8.16 | 2013.9.9 | 2013.9.17 | 2013.9.18 | 2013.9.21 | 2013.10.15 | 2013.10.28 | 2013.10.29 | 2013.11.28 |
| 17 | 11 | 18 | 16 | 22 | 15 | 14 | 16 | 18 | 13 | 10 | 11 |
| **17** | **11** | **18** | **16** | **22** | **15** | **14** | **16** | **18** | **13** | **10** | **11** |

## 6.கருத்திட்டம்

### 6.1 கிளிநொச்சிக் கருத்திட்டம்

இந்த கருத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை கவனத்தில் கொள்கின்றது. இந்த கற்கையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள 7000 நபர்களை ஆய்வுசெய்கின்றது.

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் கொள்கை விதப்புரைகளை வழங்கும் நோக்கத்துடன் பிரச்சினைக் காலத்தில் கிளநொச்சிப் பிரதேசத்தில் வாழ்கின்ற பாதிக்கப்பட்ட சமூகத்தை ஆய்வுசெய்கின்றது. இதன் முதல் கட்ட ஆய்வு கிளிநொச்சியில் (2013 ஜூலை – 2013 டிசம்பர்) பலதரப்பட்ட விடயங்களுக்கான ( உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் பயிற்சி, விவசாயம், சுகாதாரம், சுயதொழில் போன்றவை) அவசர தேவைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

இந்த கற்றை இதற்கான மூலம் மற்றும் அதனை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால சமூக அழிவில் இருந்து தடுப்பதற்கான நடவடிக்கைகள் என்பவற்றை விளங்கிக்கொள்வதற்கு உதவியது.

**கற்கைக்கான மாதிரி**

பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டது.

| வினாப்பட்டியல் | பூநகரி | பச்சிலைப்பள்ளி | கண்டாவளை | கரைச்சி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சிறிய | 771 | 504 | 1352 | 3406 | 6033 |
| பெரிய | 182 | 184 | 83 | 222 | 371 |
| மொத்தம் | **953** | **688** | **1435** | **3628** | **6704** |

வினாப்பட்டியல்களை பூர்த்திசெய்ய பங்குபற்றுனர்கள் கீழே குறிப்பிட்டவாறு அமைந்துள்ளனர்.

அ. கரைச்சியில் உள்ள 3628 பாதிக்கப்பட்ட குடும்பங்கள்

ஆ. கண்டாவளையில் 1435

இ. பச்சலைப்பள்ளியில் 688

ஈ. பூநகரியில் உள்ள 953 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள விதவைகள், தபுதாரர்கள் மற்றும் பெற்றோரை இழந்தவர்கள் என மிகவும் பாதிக்கப்பட்ட 6704 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டனர். ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கீழ்வரும் விளைவுகள் கண்டறியப்பட்டது. இந்த ஆய்வின் பின்னர் கண்டறியப்பட்ட முக்கியமான விளைவுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | விடயம் | வீதம் |
|---|---|---|
| 01 | உளப்பாதிப்பு | 95% ( மனவழுத்தத்திற்கான அறிகுறி) |
| 02 | வேலையற்றோர் | 68% |
| 03 | வேலையின்மைக்கான பிரதான காரணி | 30% ( இம்மாவட்டத்தில் போதிய தொழில்வாய்ப்பின்மை) |
| 04 | தொழில் பயிற்சி ( வயது 15 -29ற்குள்) | 65% பெற்றுக்கொள்ளவில்லை |
| 05 | மிக விரும்பும் தொழில் | 67% ( சுய தொழில்) |
| 06 | சுயதொழிலுக்கான சந்தர்ப்பம் | 37% சந்தர்ப்பமின்மை |

இந்த ஆய்வுக்கு அமைவாக இரு கூட்டங்களை நாங்கள் ஒழுங்கு செய்தோம். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப்பை 21.10.2013ம் திகதியும் உரிய அமைச்சுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான சந்திப்பை கொழும்பில் 04.12.2013ம் திகதியும் ஒழுங்குசெய்தோம். இந்த கூட்டத்தின் போது ஏனைய அனைத்து கருத்துகள், நோக்குகள், தீர்வுகள் மற்றும் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்டோம்.

கீழ்வரும் விதப்புரைகளும் தீர்வுகளும் மேற்குறிப்பட்டப்பட்ட கூட்டத்தில் இருந்து பெறப்பட்டது.

1. கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட விடயங்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்களை முன்னேற்றுவதற்கும் மற்றும் பதிலளிக்கப்படடாத சமூக மற்றும் கலாச்சரா தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்தின் தலையீட்டை மேற்கொள்ளுவதற்கு மிக முக்கியமானது
2. பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை வழங்குதல்.
3. கல்வி பயிற்சி நிறுவனங்களை (நடமாடும் / வசிக்கும் பகுதிக்கு அண்மையில் இருக்கும்) கண்டறிதல்.
4. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அறிவினைப் பரிமாறுவதற்கும் மற்றும் தொழில் கருவித் தொகுதிகளையும் (புத்தகங்கள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள், பிள்ளைகள் மற்றும் குழந்தைகளுக்கான பராமரிப்பு மற்றும் கவனிப்பு) வழங்குவதற்கு சமூதாய அடிப்படை அமைப்புக்களை (CBO) களை உருவாக்குதல்.
5. இக்குடும்பங்களுக்கு அவசிமான மருத்துவ உதவிகள் மற்றும் அரசாங்க முகவர்களின்
6. உதவிகளைப் ( உள நலம் மற்றும் தொடர்புடைய உட்பட) பெறுவதற்கு அணுகுவதற்கான முறைகளைக் கண்டுபிடித்தல்.
7. குழந்தைகள் மற்றும் பிள்ளைகள் உட்பட இளைஞர்கள் மற்றும் வயது வந்த பெண்களுக்கு வாழ்வதற்கு நியாயமான உதவிகளை வழங்குதல்.

**6.2 பட்டதாரிகளை அரச அலகுக்குள் ஆட்சேர்ப்பு செய்தல், அவர்களின் தொழில் திருப்தி மற்றும் அரச உற்பத்தித்திறனுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆய்வு**

**<u>ஆய்வின் நோக்கம்</u>**

**பிரதான நோக்கம்**

பட்டதாரிகள் தொழில் திருப்தி, அரச பிரிவின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கு உரிய ஆட்சேர்ப்பு முறையைக் கண்டறிவதற்கு அவசியமான அறிவைப் பெற்றுக்கொண்டு பொருத்தமான விதப்புரையைச் சமர்ப்பித்தல்.

**உப நோக்கம் :-**

01. பட்டதாரி பயிலுனர் முறையில் உள்ள குறைபாடுகள் மற்றும் சக்தியினைக் கண்டறிதல்.
02. பட்டதாரி பயிலுனர் ஆட்சேர்ப்பு முறையின் கீழ் அவர்களின் தொழில் விருப்பம் மற்றும் வழங்கப்பட்ட இடம் தொடர்பான தொடர்பினைக் கண்டறிதல்
03. பட்டதாரி தொழில் திருப்திக்கும் மற்றும் அரச அலகின் வினைத்திறன் மற்றம் உற்பத்தித்திறனுக்கும் தாக்கம் விளைவிக்கும் காரணிகள்

**<u>ஆராய்ச்சி முறைமை</u>**

ஆய்வுப் பிரதேசம் :-

2005/2012 ம் ஆண்டுகளில் அதிக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட 06 அமைச்சுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் உள்ள 2000 பட்டதாரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**<u>தேர்ந்தெடுக்கப்பட்ட நியமம்</u>**

| தொடர் இலக்கம் | அமைச்சு | பட்டதாரிகள் | | தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி | |
|---|---|---|---|---|---|
| | | **2005** | **2012** | **2005** | **2012** |
| 01 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 224 | 8999 | 41 | 1645 |
| 02 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நடவடிக்கைகள் அமைச்சு | 406 | 474 | 85 | 87 |
| 03 | இடர் முகாமைத்துவ அமைச்சு | 0 | 60 | 0 | 12 |
| 04 | இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு | 249 | 146 | 26 | 50 |
| 05 | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 22 | 103 | 4 | 12 |
| 06 | சமூக சேவைகள் அமைச்சு | 150 | 99 | 26 | 12 |
| **மொத்தம்** | | **10093** | | **2000** | |

**<u>தரவு சேகரித்தல் முறை</u>**

தரவு:-

ஆரம்பத் தரவு மற்றும் இரண்டாம் தரத் தரவுகள் என சேகரிக்கப்பட்டது. இதன் போது இரண்டாம் தரத் தரவுகளாக இணையத்தளம், குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் உட்பட ஏனைய தரவுகள் பெறப்பட்டு சேர்க்கப்பட்டது. முதல்தர தரவுகளை சேகரிப்பதற்காக தபால் ஊடான கட்டமைக்கப்பட்ட வினாப்பட்டியல் மற்றும் அமைச்சின் பட்டதாரிகளுடன் நேர்முக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் அமைச்சின் தலைவர்களுடனும் கட்டமைக்கப்பட்ட நேர்முகக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் தரமானதாகவும் போதியளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஆய்வு முறை:-

இந்த தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு தரவு பகுப்பாய்வு முறைகள் Ms excel, SPSS பயன்படுத்தப்பட்டது.

**<u>பிரச்சனைகளை விபரித்தல்</u>**

இதுவரை அரச அலகுக்குள் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் பின்புலம் பற்றி அறிவதற்கான தரவு அறிக்கையின்படி பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்வாங்குவதற்கான ஒழுங்கான ஆட்சேர்ப்புக் கொள்கையொன்று இருக்கவில்லை என்பதைக் காணமுடிந்தது. இதன்போது தற்போதுள்ள நிலமை தொடர்பாக ஆராயந்து பொருத்தமான கொள்கைளைக் கட்டியெழுப்புவதற்கான விதப்புரை முன்வைக்கப்படாமை பிரதான குறைபாடாக அமைந்துள்ளது.

அதனால் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொழுது, அந்த ஆட்சேர்ப்பு பிரமாணத்தில் அனேக குறைபாடுகள் காணப்பட்டது. அனேகமாக ஒரேதடவையில் அதிக எண்ணிக்கையானோருக்கு அரச அலகில் தொழில் கிடைபெதென்பது ஒரு சுபமான விடயமாகும். எனினும் இந்த ஆட்சேர்ப்பு முறையின் கீழ் பட்டதாரிகளின் விருப்பு மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றின் அடிப்படையில் பட்டதாரிகளை சேவையில் இணைத்தல் மேற்கொள்ளப்படாமை பாரிய குறைபாடாகும். இந்த நிலமை தொடர்பாக தேடிப்பார்த்தல் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**<u>பட்டதாரி ஆய்வின் கீழ் நடாத்தப்பட்ட செயலமர்வுகள்</u>**

01) திகதி : 2013/10/23

இடம்: ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

பங்குபற்றியோர்: பட்டதாரிகள் (34)

நோக்கம் : எங்கள் ஆய்வு பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களின் யோசனைகள் மற்றும் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளல்

பெறுபேறு: 01. எங்கள் பெறுபேறுகளுக்கு அமைவாக அவை தொடர்பான மேலதிக உறுதிப்படுத்தலை மேற்கொள்ளக்கூடிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாதல்.

02. பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போன தரத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாதல்.

03. மேலும் அவர்களின் கருத்துகள், யோசனைகள், அனுபவம் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாதல்.

02) திகதி : 2013/10/24

இடம்: ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

பங்குபற்றியோர்: அமைச்சின் மேலதிக செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் (15)

நோக்கம் : அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி ஆய்வுகளின் தரவுகளின் அடிப்படையில் நிறுவனத் தலைவர்களாக அவர்களின் அனுபவம், யோசனை, விதப்புரை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல்.

பெறுபேறு: 01. பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு முறைமை தொடர்பான விபரமான தகவல்களை சமர்ப்பித்தல்.

02. தற்போதுள்ள நிலமையை ( பட்டதாரிகளின் தொழில் திருப்தியின்மை) மாற்றுவதற்கு அவசியமான யோசனைகளை சமர்ப்பித்தல்.



03) 03) திகதி : 2013/10/24

இடம்: ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

பங்குபற்றியோர்: பட்டதாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்கள்

நோக்கம் : இறுதியாக எங்களின் ஆய்வுப் பெறுபேறுகளை அடிப்படையாக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட முன்வைக்கப்பட்ட விதப்புரை தொடர்பாக மேலும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்.

| **தேய்மானம் மற்றும் தவணை முறைக் கடன் கரைப்பு** | 6 | **4,318,600.74** | **4,003,384.37** | **4,400,000.00** |
| **<u>பயணச் செலவு, பிழைப்பூதியம் மற்றும் கொடுப்பனவு</u>** | 17 | | | |
| உள்நாட்டு பயணச் செலவு மற்றும் பிழைப்பூதியம் | | 37,520.00 | 74,087.50 | 50,000.00 |
| கணக்காய்வு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 84,400.00 | 54,400.00 | 73,600.00 |
| சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | | 186,800.00 | 181,600.00 | 240,000.00 |
| | | **308,720.00** | **310,087.50** | **363,600.00** |
| **பயன் மற்றும் சேவைகள்** | 18 | | | |
| சோலைவரிRates | | 39,199.97 | 43,555.52 | 39,200.00 |
| மின்சாரம் | | 579,465.92 | 887,272.97 | 700,000.00 |
| தண்ணீர் | | 31,839.73 | 36,367.65 | 89,300.00 |
| தொலைபேசிக் கட்டணம் மற்றும் வாடகை | | 171,843.68 | 195,975.42 | 170,000.00 |
| தபால் மற்றும் டெலெக்ஸ் கட்டணம் | | 24,400.00 | 8,265.00 | 25,000.00 |
| சுத்திகரிப்புச் சேவை | | 206,146.21 | 151,931.64 | 206,100.00 |
| விளம்பரம் | | 103,084.80 | - | 100,000.00 |
| பாதுகாப்பு சேவை | | 518,010.00 | 383,940.00 | 455,400.00 |
| இணையம் | | 78,949.86 | 108,561.20 | 53,900.00 |
| ஏனைய பயன் மற்றும் ஏனைய சேவைகள் | | 271,865.83 | 249,083.08 | 300,000.00 |
| | | **2,024,806.00** | **2,064,952.48** | **2,138,900.00** |
| **பராமரிப்புச் செலவுகள்** | 19 | | | |
| கட்டடம் மற்றும் கட்டமைப்புத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | | 8,256.43 | - |
| பொறி மற்றும் இயந்திரத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 251,557.32 | - | 297,900.00 |
| வாகனத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 636,054.86 | 529,643.34 | 670,500.00 |
| அலுவலக உபகரணத் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 192,727.60 | 486,074.93 | 205,100.00 |
| கணணித் திருத்தம் மற்றும் பராமரிப்பு | | 61,944.80 | 37,934.60 | 200,000.00 |
| மின்சார உபகரணங்கள் திருத்தம் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| மற்றும் பராமரிப்பு | | 12,386.00 | 10,910.00 | 54,400.00 |
| | | **1,154,670.58** | **1,072,819.30** | **1,427,900.00** |
| **ஏனைய செலவுகள்** | 20 | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 79,289.00 | 85,000.00 | 164,289.00 |
| செய்தித்தாள் | | 14,000.00 | 16,760.00 | 13,920.00 |
| ஊழியர் நலன்புரி | | 43,101.00 | | 43,000.00 |
| ஏனைய சேவைச் செலவுகள் | | 39,659.75 | 136,551.00 | 38,000.00 |
| விருந்தோம்பல் செலவுகள் | | 107,655.00 | 112,261.00 | 110,000.00 |
| சந்தேகக் கடன் (நிமால்போப்பகே) | | 71162.82 | - | - |
| | | **354,867** | **350,572.00** | **369,209.00** |

## 12.குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள்

**1.** இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை 1997ம் ஆண்டு 18ம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்திற்கு மனித வள அபிவிருத்திக்கு அவசியமான அனைத்து மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சாட்டப்பட்டுள்ளது.

**2. கணக்குகளை விளக்கல் மற்றும் நிதியில் கூற்றுகளை வழங்குவதற்கான அதிகாரம்**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை பொதுக் கூட்டுத்தாபனமாக இருப்பதனால், நிறுவனத்தின் நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக, நிறுவனத்தின் அதிகாரத்திற்காக அவ்வருடத்தில் அதன் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் முன்வரைபினை தயாரித்தல் வேண்டும். இந்த அறிக்கை, அக்காலப்பகுதியில் உரிய அமைச்சரினால் வழங்கப்பட்ட யாதேனும் வழிகாட்டல்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகளின் பிரதிகளை, வருடம் முடிவடைந்த நான்கு மாதங்களின் பின்னர், உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் (அவர் உரிய அமைச்சராக இல்லாத பட்சத்தில்), திட்டமிடல் அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல் வேண்டும்.

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு நிதியாண்டும், கணக்காய்வாளர் நாயகம் யாதேனும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்படின் அவ்வடிவத்தில், ஒவ்வொரு நிதியாண்டும் நிதியாண்டு முடிவடைந்து நான்கு மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு நிறுவனமும் இந்த உப பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தவறின் இச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாகக் கருதப்படுவதுடன், மஜிஸ்ரேட்டின் முன்னர் நம்பிக்கையைய இழந்தால், ரூபா ஆயிரத்திற்கு குறைவில்லாத தண்டப்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**3. இணக்கக் கூற்று**

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் கணக்கீட்டு முறை, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்றது.

## 4. அளவீட்டு அடிப்படை

சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில், குறிப்பிட்ட தளபாடம் மற்றும் பொருத்திகள், அலுவலக உபகரணங்கள், மினசார பொருத்திகள் மற்றும் உபகரணங்கள், கணணிகள், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தவிர்த்து 2008 மற்றும் 2011ம் ஆண்டில் இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்படுகின்றது.

## 5. சொத்துத்து மதிப்பீட்டுக்கான அடிப்படை

**5.1** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவை குறைந்து செல்லும் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பிடப்படுகின்றது.

**5.2** சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் என்பவற்றுக்கு தேய்மானம் அறவிடப்பட்டு மதிப்பிடப்பட்ட பயன்படுத்தல் காலத்தின் பின்னர் பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**5.3** 2009ம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு தேய்மானம் வழங்கப்படுவதில்லை மற்றும் அவை அககற்றப்படும் பொழுது முழு ஆண்டுக்கான தேய்மானம் வழங்கப்பட்டது மற்றும் 2009ம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ∴ அகற்றப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

**5.4** நுகர்வுக் களஞ்சியம் குறைந்த ஆகுசெலவு மற்றும் தேறிய சாத்தியமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

## 6. தேய்மானம்

சொத்துக்களின் வகை மற்றும் தேய்மான வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தன்மை மற்றும் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் மற்றும் கட்டமைப்பு | 2.5% |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மினசாரப் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| கணணிகள் | 20% |
| கணணி மென்பொருள் | 25% |
| வாகனங்கள் | 20% |
| புத்தகங்கள் | 10% |
| ஏனைய சொத்தக்கள் | 10% |

## 7. ஒப்பீட்டு இலக்கங்கள்

கடந்த நிதியாண்டின் இலக்கங்கள் மீண்டும் வகைப்படுத்தப்பட்டு மற்றும் சீராக்கப்பட்டு நிதிக்கூற்றுடன் ஒப்பிடத்தக்க வகையில் தயாரிக்கப்படும்.

## 8. அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான நிகழ்வுகள்

அனைத்து பொருளாக்கப்பட்ட ஐந்தொகை நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அவசிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது அல்லது நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 9. தொடரப்படாத NHRDCயின் செயற்பாடுகள்

சபையினால் 2013 ஒகஸ்ட் 02ம் திகதி மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் "Update the Web Site on Job Processing" நடவடிக்கை நிறுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைக்கு ஒதுக்கீட்டின் மீதி மூலதன செலவுகள் ஏனைய நடவடிக்கைகளுக்கு மீள்திருத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 10. அரச மானியத்திற்கான கணக்கீடு

இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபைக்கு பொதுத் திறைசேரியினால் அரசின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களாக கிடைக்கப் பெற்றவையின் மூலம் நிறுவனத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகை மற்றும் இவ்வருடம் தேய்மானமாக அறிவிடப்பட்ட தொகை என்பவை மூலதனச் சொத்துக்களின் பயன்பாட்டுக்கால முறையியல் அடிப்படை மீதான வருமானமாக அடையாளம் காணப்பட்டது.

## 11. ஓய்வூதிய நன்மைச் செலவு

### 11.1 பங்களிப்பு திட்டத்தை வரையறுத்தல் – ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு தகைமை பெற்ற அனைத்து ஊழியர்களுக்குமான பங்களிப்பு உரிய பங்களிப்பு நிதியத்தின் ஊடாக உரிய விதிமுறைகளின் அமைவாக அணவல் செய்யப்பட்டது.

### 11.2 ஓய்வூதியக் பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க ஒய்வூதிய கொடுப்பனவுச்ச் சட்டத்தின் கீழ் வரும் அனைத்து ஊழியர்களுக்குமான கொடுப்பனவுகள், இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 19இல் குறிப்பிடப்பட்ட 'ஊழியர் நன்மைகள்' என்பதற்கு அமைவாக நிதிக்கூற்றில் ஒய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படவில்லை அல்லது அட்டுறுவாக பெறுமதியிடப்படவில்லை.

## 12. நிதிச் செயற்பாடுகள்

சபை அதன் மூலதனச் சொத்துக்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றின் போது வினைத்திறமையுடன் செயற்பட்டதுடன் வருமானத்தை அறவிட்டது. வருமானச் செலவுகளின் மிகை அல்லது பற்றாக்குறை, அனைத்து பொறுப்புகள் மற்றும் சொத்துக்களின் தேய்மானம் என்வற்றின் ஏற்பாடுகளின் பின்னர் ஏற்பட்டதாகும்.

## 13. காசுப் பாச்சல் கூற்று

இலங்கை அரச சேவை கணக்கியல் நியமம் 02இன் பிரிவு 27இல் குறித்துறைக்கப்பட்டவாறு நேரடியல்லா முறையில் காசுப்பாச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது.






විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. } வைஎஸ்/டி/என்எச்ஆர்டீசீ /1/13/05   ඔබේ අංකය உமது இல. Your No. }   දිනය திகதி Date } 2015 மார்ச் 11

தலைவர்,
இலங்கை தேசிய மனிதவளங்கள் அபிவிருத்திப் பேரவை

**இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2014 செப்தெம்பர் 03 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் மீண்டுவரும் மானியங்களின் கீழ் செலவினம் ரூபா 13,780,000 ஆக இருந்த போதிலும், திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் அப்பெறுமானம் ரூபா 13,966,566 ஆக இருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் மற்றும் கணக்கு என்பவற்றிற்கிடையெ ரூபா 186,566 ஆன வேறுபாடு நிரூபணமாகியது.

(ஆ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்படுகின்ற ரூபா 1,702,500 கிரயத்திலான 04 சொத்து உருப்படிகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 செலுத்த வேண்டிய கணக்குகளும் பெற வேண்டிய கணக்குகளும்

(அ) செலுத்த வேண்டிய 03 செலவின உருப்படிகளின் கூட்டுத்தொகை ரூபா 73,097 தொகை 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையின் தலைவராக கடமையாற்றிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 71,162 தொகை கணக்காய்வு திகதியான 2014 ஏப்ரல் 02 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 292,661 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 108,058 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 400,719 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அரசின் மீண்டுவரும் மானியம் ரூபா 4.4 மில்லியனால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

எவ்வாறாயினும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணமொன்று இல்லாமல் பேரவையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட செலவினம் 2013 ஒக்தோபர் மாதத்திலிருந்து 88 சதவீதத்தாலும் சுகாதார சேவைகள் செலவின நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் 2013 யூலை மாத்திலிருந்து 49 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

இலங்கை தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி பேரவை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பந்தியின் கீழ் பேரவையின் செயற்பாடு மற்றும் 6 பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கடந்த காலப்பகுதிக்குரிய திட்டம் உட்பட அதன் உள்ளவாறான செயலாற்றலில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இந்நிறுவனத்தை ஆரம்பித்த அடிப்படை நோக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன் ஊடாக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 06 நோக்கங்களில் 03 மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மேற்குறித்த 10 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 9,850,000 ஆக இருந்ததுடன், ரூபா 7,230,000 தொகை செலவு செய்யப்பட்டு 9 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட 9 நிகழ்ச்சித்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை 3 நிகழ்ச்சித்திட்டங்களே அடையப்பெற்றிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

-----------------------------------------------------------------

பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை மிகவும் செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக அந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட வேண்டிய அங்கத்தவர்கள் நாட்டின் பொருளாதார மற்றும் மனித வள அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்களுடன் கூடிய குழுவொன்றாக இருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது பேரவைக்கு நியமிக்கப்பட்ட 17 அங்கத்தவர்களில் 04 பேர் நடாத்தப்பட்ட எந்தவொரு கூட்டத்திற்கும் சமூகமளித்திருக்கவில்லை. அனைத்துக் கூட்டங்களுக்காக ஒரு உறுப்பினர் மாத்திரம் சமூகமளித்திருந்தார். 01 கூட்டத்தொடருக்காக மாத்திரம் சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை 05 ஆக இருந்தது. அத்துடன் அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவில் (p) இன் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய 03 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையால் தனியார் நிறுவனமொன்றின் மூலம் ரூபா 257,500 தொகை ஆரம்பமாக செலவு செய்து 2011 செப்தெம்பர் 20 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் இலங்கையில் வேலையற்ற தொழில் துறைசார் நிபுணர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு முறைமை ஒன்றைத் தயாரித்துப் பேணுவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்காக ரூபா 920,375

செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், செலவு செய்யப்பட்ட முழுத்தொகையும் பயனற்றதாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றியளிக்காமை தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ள காரணங்கள் தாக்கமளித்திருந்தன.

i. முறையான நடைமுறையொன்று இல்லாமல் தனியார் நிறுவனமொன்று தெரிவுசெய்தல் மற்றும் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட நிறுவகத்திற்கு இச்செயற்பாட்டை தொடர்ச்சியாகவும் முறையாகவும் பேணிச் செல்வதற்குள்ள இயலுமை தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

ii. இதற்குரிய தனியார் சேவை நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை முறையற்றதாகவும் பூரணமற்றதாகவும் இருந்தது.

(ஆ) உயர் கல்விக்காக வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களை வலுப்படுத்துவதற்காக தொழில் கல்விக்கு தொடர்புபடுத்தல் மற்றும் அதற்காக உள்ள தடைகளை இனங்காண்பதற்கான செயற்திட்டமொன்றாக தெரிவுசெய்யப்பட்ட 05 மாவட்டங்களின் மாணவர்களை பங்குபெறச் செய்து அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 1,810,879 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

i. ஆரம்ப நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 1906 மாணவர்கள் சமூகமளித்திருந்த போதிலும், அதில் 50 சதவீதம் மாத்திரம் தொழில்சார் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக தொழில் பயிற்சி நிறுவனங்களில் பதிவு செய்திருந்தனர்.

ii. தெரிவுசெய்யப்பட்ட 05 மாவட்டங்களின் பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் மாணவர்களை பங்குபெறச் செய்யும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைக்கு உட்டுத்தப்பட்ட 4 மாவட்டங்களில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அம்மாவட்டங்களின் 4 பிரதான நகரங்களை அண்மித்த பிரதேசங்களிலிருந்து 438 மாணவர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், அதற்கு வெளியே அமைந்துள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 25 மாணவர்கள் மாத்திரம் சமூகமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்தோடு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட 03 மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட தினத்தில் தொழில் பயிற்சிக்காக வெவ்வேறு நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 400 மாணவர்களில் 355 மாணவர்கள் தொழில் பயிற்சிகளில் பங்குபற்றியிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உபபந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வு 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, எய்தப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான செயல்முன்னேற்றத்தை நிதி ரீதியாக ஒப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

பேரவையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பாடின்றி இருந்ததுடன் வரிசை அமைச்சான இளைஞர் விவகார தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேரவையின் நடவடிக்கைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு

(ஆ) கணக்கீடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்,

பொல்துவ வீதி,

பத்தரமுல்லை

**<u>இலங்கையின் தேசிய மனித வன அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் 31 டிசம்பர் 2013ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பாக 1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) ம் பந்திக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>**

உமது இலக்கம் வைஎஸ்/டி/என்எச்ஆர்டிசி/1/13/05 மற்றும் 10 செப்டெம்பர் 2014ம் திகதியுடைய கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக. அதன்படி தெளிவுபடுத்தல்களை கீழ்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

2.2 <u>நிதிக்கூற்று தொடர்பான கருத்தைத் தெரிவித்தல்</u>

அ) வேறுபாட்டுக்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை சீராக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆ) ஏற்றுக்கொள்கின்றேன்.

புத்தகத்தின் பெறுமதி பூஜ்ஜியமாகும் உற்பத்தித்திறன் ஆயுட்காலத்தை பதிலீடு செய்து உரிய பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.2.3 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மற்றும் கிடைக்க வேண்டிய கணக்கு

அ) <u>கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு</u>

ஏற்றுக்கொள்கின்றேன்.

1 இலிருந்து 3 வருட கால இடைவெளியில் கொடுப்பனவ செய்ய வேண்டிய செலவில் ரூபா 48,097,63/- பெறுமதியான செலவை நீக்குவதற்கு நிர்வாக சபையின் அனுமதி கிடைத்துள்ளதுடன், உரிய சீராக்கம் 2014ம் ஆண்டு இறுதிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகுதி செலவு தொடர்பாக கண்டறிந்து உரிய உரித்தாளருக்கு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது நிர்வாக சபையின் அனுமதியுடன் அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்படும்.

ஆ) <u>கிடைக்க வேண்டிய கணக்கு</u>

ஏற்றுக்கொள்கின்றேன்.

முன்னர் இருந்த தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 71,162.82 வைப் பெற்றுக்கொள்வதற்கு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக நினைவூட்டல் கடிதம் அனுப்பல், அழைப்பாணை அனுப்புதல் மற்றும் நியாய சபைக்கு அனுப்புதல் போன்ற அறவிடுவதற்கான செயற்பாடுகள் கால தாமதமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிறப்பான பெறுபேறு கிடைக்கப் பெறாமையினால் நீதிமன்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

3. <u>நிதி மீளாய்வு</u>

<u>நிதி விளைவு</u>

ஏற்றுக்கொள்கின்றேன்.

*நிபுணதா பியச* பாதுகாப்பு சேவையின் ஒப்பந்தம் மற்றும் சுத்திகரிப்பு சேவையின் ஒப்பந்தம் என்பவற்றை வழங்குகையில் உரிய பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டது இளைஞர் நடவடிக்கைகள் அமைச்சினாலாகும். அமைச்சின் 09.09.2013ம் திகதி இலக்கம் 2-3/03/22 மற்றும் 26.02.2013ம் திகதி இலக்கம் 02-03/03/21 உடைய கடிதங்களின் மூலம் இந்த சேவைகள் தொடாபாக செலவிட வேண்டிய தொகை குறிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பெறுகை நடவடிக்கையானது எங்கள் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட விடயம் என்பதனால் விலை அதிகம் என்பது தொடர்பான மேலதிக தகவல்களை எங்கள் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வது சிரமமானதாகும்.

4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>

4.1 செயற்பாடுகள்

ஏற்றுக்கொள்ளவில்லை.

சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 6 நோக்கங்களும் பூர்த்திசெய்யப்படும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து செயற்படுத்தல், சட்டத்தின் நோக்கங்களின் சுபாவம் மற்றும் அவற்றினை செயற்படுத்துவதற்கான இயலுமை என்பவற்றை ஆராய்ந்து பார்த்த போது 30.06.2013 வரை இருந்த 9 பேர்கள் அடங்கிய சிறிய பணிக்குழுவின் மூலம் இதனை நடைமுறைப்படுத்துவது பிரயோகரீதியானதாக இருக்கவில்லை. புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சட்டத்தின் 14(1)ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2013ம் ஆண்டு சட்டத்தின் நோக்கங்களில் பிரதான நோக்கங்களின் கீழ்வரும் உப நோக்கங்கள் பூர்த்தியாகும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. அதனால் இந்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக கவனமெடுக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அ ) ஏற்றுக்கொள்ளவில்லை

ஏற்றுக்கொள்ளாததற்கான காரணம் கீழ்வருமாறு நோக்கங்களுக்கு முன் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

14 (i) 2 வது நோக்கம்: தேசிய கொள்கைக்கு இணக்கமாக மனித வள அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான திட்டம் தற்போது சிரேஸ்ட அமைச்சரவை செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதியைப் பெற்று செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் எங்கள் நிறுவனம் தேசிய மனித வளத் திட்டமொன்றினை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

14 (i) 3 வது நோக்கம்: மேற்குறிப்பிட்ட தேசிய மனித வளக் கொள்கை இதுவரை செயற்பாட்டு மட்டத்தில் இருக்காததனால் அது தொடர்பாக மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கான் சந்தர்ப்பம் இவ்வருடம் எழுவில்லை.

14 (i) 4 வது நோக்கம்: அரசினால் அனுமதியளிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டமான 'பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் திட்டம் மற்றும் அதனை செயற்படுத்துதல்' தொடர்பாக ஆராயந்து பார்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டமான பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான உற்பத்தித்திறனை அறிந்துகொள்வதற்கான ஆய்வு சட்டத்தின் 14.1(1) மற்றும் 4ம் பந்தியின் நோக்கம் பூர்த்தியாகும் வகையில் பொது நிகழ்ச்சித்திட்டமாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

14 (i) 5 வது நோக்கம்: சட்டத்தின் 1வது அட்டவணையில் 2.2வது விடயம் மற்றம் 5ம் இலக்க விடயம் என்பவற்றை பூர்த்திசெய்யும் பொது நிகழ்ச்சித்திட்டங்களாக தொழில் வழிகாட்டல் கற்கை மற்றும் இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான மதிப்பீட்டு அறிக்கை என்பவை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

14 (i) வது நோக்கம்: தேசிய நோக்கத்திற்கு இசைவாக செயற்படுத்தப்பட்ட 'தயட கிருள' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எங்கள் சபையினால் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்க அவசியம் எனக்கருதும் 4 மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

ஆ) ஏற்றுக்கொள்ளவில்லை

2013ம் ஆண்டுக்காக செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் 8 நிறுவனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளினை அடைவதற்கு நேரடியான பங்களிப்பை வழங்கிய நிகழ்ச்சித்திட்டங்களாகும். மிகுதி நிகழ்ச்சித்திட்டங்களானது வருடாந்தம் நடைபெறும் தயட கிருள நிகழ்ச்சித்திட்டமாகும். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எட்டில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மட்டுமே கேள்வி மனுக்கோரலின்றி 2013ம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. அதன்படி செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்தின் இலக்கும் 2013ம் ஆண்டு ஒதுக்கீட்டின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

### 4.2 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்த நிறுவனத்தின் நிர்வாக சபையில் 11 அங்கத்தவர்கள் அமைச்சுகளின் செயலாளர்களாக இருப்பதுடன் 4 அங்கத்தவர்கள் தலைவர்களாவர். அதனால் அதிக பணிகளைக் கொண்ட மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நித்தமும் நடைபெறும் நிர்வாகக் குழுக்கூட்டத்திற்கு பங்களிப்பு செய்யுமாறு எதிர்பார்ப்பது நடைமுறைச் சாத்தியமல்லா விடயமாகும். எனினும் தற்போதுள்ள நிலமை காரணமாக நிர்வாக சபையின் தீர்மானத்திற்கு அமைவாக நிறுவனத்தின் நோக்கத்தினை பூர்த்திசெய்வதற்கு சபையின் அங்கத்தவர்களின் உச்சளவான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.3 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

அ) கடந்த வருடங்களில் வேலையற்ற தொழில்திறன் பெற்றவர்களின் தகவல்கள் உள்ளடங்கிய தரவு முறைமையொன்றை தயாரித்து பேணுவதற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டு செயற்படுத்துவது கூறவேண்டிய அலுவலர்கள் தொடர்பாக கீழ்வரும் நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய மனிதவள ஆலோசனை சபை மற்றும் பியோடெல் லங்கா தனியார் நிறுவனம் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 12ம் பந்திக்கு அமைவாக 2013ம் ஆண்டு நிறுவனத்தினால் மீட்டுகொடுப்பாளரை நியமிக்கும்படி அந்நிறுவனத்தின் தலைவரான பட்டியவெல மகிந்த ஹிமிக்கு 05.06.2013ம் திகதி கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 08.07.2013, 27.08.2013 மற்றும் 19.10.2013ம் திகதி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு அவசிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக பதிலளிப்பு எதுவும் மேற்கொள்ளப்படாததனால் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவிடம் இது தொடர்பான முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆ) i. ஏற்றுக்கொள்ளவில்லை

பங்குபற்றியவர்ளின் எண்ணிக்கை 2930 ஆவதுடன் இதில் பதிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1871 ஆகும்.

ii. கணக்காய்வின் போது ஆய்வுக்குட்பட்ட இரத்தினபுரி, கேகாலை, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 1202 ஆகும்.

இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அந்நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு முன்னர் அனைத்து பயிற்சி நிறுவனங்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அங்கு சேவை புரியும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், என்பவர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு க.பொ.த ( சா.த) மற்றும் க.பொ.த ( உ.த) பயின்ற மாணவர்களை பங்குபற்றுவதற்கு அறிவுறுத்தும் படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அத்துடன் இவ்விடயம் அடங்கிய போஸ்டடொன்று ஒவ்வொரு கிராம சேவை அலுவலகப் பிரிவிலும் ஒட்டும்படி அனுப்பப்பட்டது. மேலும் பரீட்சைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட 2012ம் ஆண்டு சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளில் தோல்வியடைந்த மாணவர்களின் விபரங்களில் இருந்து தனிப்பட்ட கடிதங்கள் மாணவர்களுக்கு அனுப்பப்பட்டு அறிவூட்டப்பட்டது.

இது தொடர்பாக திறன் அபிவிருத்தி அலுவலர்களை வினவிய போது, உரிய பிரதேசங்களில் இருந்து வருகை தருவதற்கான போக்குவரத்து சிரமம் காரணமாகவே அவர்கள் வருகை தரவில்லை எனப் பதிலளித்தனர். அத்துடன் நகரத்திற்கு வெளியில் உள்ள பிரதேசங்களில் மாணவர்களின் பங்களிப்பு குறைதல் என்பது பரவலாக காணக்கூடிய நடைமுறையொன்றாகும்.

கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபரி மாவட்டங்களில் பாடநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவர்களில் எண்ணிக்கை 745ஆக இருந்தபோதிலும் பாடநெறிகளை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 89ஆகும்.

அத்துடன், தொழில்பயிற்சிக்கு இந்த நிறுவனத்தின் ஊடாக வருடம் முழுவதிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாததுடன், அனேகமாக வருட ஆரம்பத்தில் இது மேற்கொள்ளப்படுவதனால் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளது. அத்துடன் சில நிறுவனங்களில் காணப்படும் போதிய இடம், உபகரணம் மற்றும் ஆலோசனையாளர்கள் பற்றாக்குறை என்பன காரணமாக பிற்காலத்தில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சந்தப்பங்கள் உள்ளதுடன் அவ்வாறான மாணவர்களின் விபரங்கள் இப்புள்ளி விபரத்தில் உள்ளடக்கப்படவில்லை. இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேற்றை ஒரு வருடகால புள்ளிவிபரத்தின் அடிப்படையில் மட்டும் தீர்மானித்தல் நடைமுறைச்

சாத்தியமில்லாதவொன்றாகையினால் அதனை நீண்ட காலத்தில் அளவிடுதல் பொருத்தமானதாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடநெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்வதற்காக மட்டுமன்றி, இதற்கு மேலாக மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் கேள்விக்கொத்துகள் மூலம் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் நோக்கம் இந்த மாவட்டங்களில் பாடசாலையை விட்டு நீங்கிய மாணவர்கள் தொழில்கல்வியில் ஈடுபடாமல் இருந்ததற்னான காரணத்தை ஆராய்ந்தறிந்து அமைச்சருக்கு விதப்புரையொன்றை வழங்குதலாகும். இந்த அறிகை பணிப்பாளர் சபையினால் அனுமதியளிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்கு நடவடிக்கைகளின் சுபாவம் மற்றும் நல்லாட்சி

### 5.1 <u>கூட்டிணைந்த திட்டம்</u>

ஏற்றுக்கொள்கின்றேன்.

2014 -2018 வரையிலான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் முன் மூன்று வருடங்கள் தொடர்பான மீளாய்வினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தீர்மானிக்கப்பட வேண்டிய நிதி இலக்கின் பெறுமதியை குறிப்பிட முடியாது என்பதனால் அண்ணளவான பெறுமதியைக் குறிப்பிட்டு அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.2 உள்ளக கணக்காய்வு

ஏற்றுக்கொள்கின்றேன்.

சபையினுள் உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதற்கு உள்ளக கணக்காய்வு அலுவலரை சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக ஆணைக்குழுவிடம் எனது இலக்கம் NHRDC/1/Rec/2012 மற்றும் 2012/10/05 திகதி கடிதத்தின் மூலம் உரிய அமைச்சின் ஊடாக கோரப்பட்டிருந்த போதிலும் அப்பதவிக்கான அனுமதி வழங்கப்படவில்லை. ஆதனால் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் ஊடாக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 6. முறைமை மற்றும் நிர்வாகம்

குணக்காய்வில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடாபாக அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

விஜய விக்ரமரத்தன
தலைவர்